# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி. உமா | அசல் வழக்கு எண். | 29/2020 |
| க/பெ. | - | சிவராமன் | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

21.04.2026

**குறுக்கு விசாரணை :**

1. வாதி எனக்கு தெரியும். வாதி எங்கள் ஊரைச் சேர்ந்தவர். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நாங்கள் ராதாதேவி என்பவரிடம் வாங்கிய கிரையம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார், வழக்கு சொத்து வீட்டு மனை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 6 சென்ட் ஆகும். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 178. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் என்னவென்றால் எனக்கு தெரியாது. வாதி எனக்கு உறவினர் இல்லை. 1ம் பிரதிவாதி வாதிக்கு உறவினர் என்றால் சரிதான். வாதியின் அப்பா பெயர் கண்ணன். வாதியின் அப்பாவான கண்ணன் என்பவரும் 1ம் பிரதிவாதியின் மாமனாரான ரங்கநாதன் என்பவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. வழக்கு விவரங்களை எனது வழக்கறிஞர் எனக்கு படித்து தெரிவித்தார்.

2. வழக்குரையில் வாதியின் அப்பாவான கண்ணன் என்பவரும் 1ம் பிரதிவாதியின் மாமனாரான ரங்கநாதன் என்பவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் வாதியின் சகோதரியான சித்ரா என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் உரிமை பற்றி எனக்கு தெரியாது, ஆனால் கிழக்கு பக்கம் உள்ள இடத்தில் வாதியின் தம்பி கஜேந்திரன் என்பவர் தான் குடியிருந்து வருகிறார். வழக்கு சொத்தை ஒட்டினார் போல் எனக்கு பூமி இல்லை என்றால் சரியல்ல, என் மாமனாரின் பூமி உள்ளது. வழக்கு சொத்தின் எந்த திசையில் என் மாமனாரின் பூமி உள்ளது என்றால் எதிர் திசையில் தான் உள்ளது, பக்கத்தில் இல்லை.

3. வழக்கு சொத்தை நான் எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் 18.12.2019 ல் ரூ. 3,50,000/- (ரூபாய் மூன்றரை லட்சம்) கிரையம் வாங்கினேன். நான் வழக்கு சொத்தை ரூ. 3,50,000/- (ரூபாய் மூன்றரை லட்சம்) ற்கு கிரையம் வாங்கியதை பற்றி என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் அவசியம் இல்லாததால் சொல்லவில்லை. நான் உண்மையில் பணம் கொடுத்து வழக்கு சொத்தை கிரையம் வாங்கியிருந்தால் அது பற்றி பிரமாண பத்திரிக்கையில் சொல்லியிருப்பேன் என்றால் பணம் கொடுத்து தான் வாங்கினேன். என் பிரமாண

பத்திரிக்கை மற்றும் எதிர்வழக்குரையிலும் வழக்கு சொத்தை பணம் கொடுத்து வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

4. வழக்கு சொத்தில் ஆடு, மாடு கட்டி அனுபவித்து வருகிறேன் என்றால் வீடு கட்டி ஆடு, மாடு வைத்து அனுபவித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண இரசீதுகள், வீட்டு வரி இரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றால் நான் 2019 ல் கிரையம் வாங்கினேன், வாதி 2020 ல் வழக்கை தாக்கல் செய்துவிட்டார். வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து தான் வழக்கு சொத்திற்கு மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து தான் பட்டா வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வாதியானவர் வழக்கு சொத்தை பொறுத்து கிரைய உடன்படிக்கை உள்ளது என்று குறிப்பிட்டு எங்களுக்கு வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் அனுப்பினார். வா.சா.ஆ.3 ஆவணத்தை என் கணவர் வாங்கியுள்ளார் என்றால் சரிதான், நாங்கள் கிரையம் வாங்கிய பின்பு தான் அறிவிப்பு வந்தது. வழக்கு சொத்து சம்மந்தமாக வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கிரைய உடன்படிக்கை உள்ளது என்று தெரிந்த பின்பு தான் என் கணவர் என் பெயரில் வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல, கிரைய உடன்படிக்கை பற்றி எனக்கு தெரியாது. என் குடும்பத்தில் சொத்துக்கள் வாங்குவது, விற்பது ஆகியவை எனக்கு தெரிந்து தான் நடக்கும் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.3 ஆவணத்தை பற்றி என் கணவர் எனக்கு சொன்னாரா என்றால் சொன்னார்.

6. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.12 ஆவணங்கள் அனைத்தும் வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் சாட்சியத்திற்கு ஏற்கத்தக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் செல்லாது என்று தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றும் மற்றபடி வழக்குரை பொருண்மைகளை குறிப்பாக மறுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 08.12.2021 ல் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையானது இ.ம.எண்.77/2020 ல் தாக்கல் செய்த எதிருரை தான் என்றும் அசல் வழக்கில் நான் எதிர்வழக்குரையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இ.ம.எண்.77/2020 ல் உள்ள மனு பொருண்மைகளுக்கு தான் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்குரைக்கு மறுப்பு தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. இதுவரை எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதது வாதியின் வழக்கை ஏற்றுக்கொண்டதாகவே கருதபடும் என்றும் அதன் காரணமாக வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.